செ.கு.எண் : 58 நாள் : 26.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 26.2.2013

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைகுறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.பிச்சுமணி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.2.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.சிவானந்தம் அவர்கள் 25.2.2013 அன்று சங்கராபுரம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவானந்தம் மற்றும் தலைமைக் காவலர் திரு. பிச்சுமணி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவானந்தம் மற்றும் உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. பிச்சுமணி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்